# தட்டுறோம் தூக்குறோம்



கீழடி பதிப்பகம்

நிவந்திகா தேவி

# தட்டுறோம் தூக்குறோம்

## நிவந்திகா தேவி

கீழடி பதிப்பகம்

தலைப்பு:

**தட்டுறோம் தூக்குறோம்**

கதையாசிரியர்:

**நிவந்திகா தேவி**

பதிப்பாளர்கள்

**மதனகோபால். ரா**
**வெங்கடேஷ். ரா**

முதற்பதிப்பு :

**பிப்ரவரி 2018**

---

**கீழடி பதிப்பகம்**

2/1049, ஸ்டேட் பேங்க் காலனி,
4வது தெரு, சாட்சியாபுரம்,
சிவகாசி - 626 124

மின் அஞ்சல் :

**keezhadi@gmail.com**

---

இந்த புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறு பிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு மற்றும் நகல் எடுப்பது, ஒலிப்பதிவு செய்வது அல்லது எந்த தகவலையும் சேமிப்பு மற்றும் திரும்பப்பெறும் முறையில் பயன்படுத்துவதோ கூடாது

# நன்றி

அன்பாலும் தமிழாலும் அடிக்கடி என்னை செப்பனிடும் உடன் பிறவா அண்ணன் அருள்குமரன் அவர்களுக்கும்

இணைய தோழமைகளுக்கும் நட்புகளுக்கும் ...

**- நிவந்திகா தேவி**

# தட்டுறோம் தூக்குறோம்

*அந்த நான்கு பேரும் அரைவட்டமாய் குத்துக்காலிட்டு உட்கார்ந்திருந்தார்கள்.*

இருவர் கையிலிருந்த சிகரெட்டில் கஞ்சா நெடியடித்தது. மற்ற இருவரின் பார்வையிலும் கிறக்கமான போதை.

“பொருளெல்லாம் பத்திரமா எடுதுக்கிட்டீங்களாடா? “என்று கேட்டான்  முட்ட கோபி.  சீனியர்.

“ செல்வா  பார்ட்டி எப்படா வருவான். ? “

வந்து புள்ளார் கோயிலாண்ட வெய்ட் பண்ணிட்டு இருக்கான் வர சொல்லவா ? என்றான் வயதிலேயே மிக இளையவனாய் இருந்த. – செல்வா.

ரேட் பேசிட்டியா ?

ம்ம் ரெண்டு தரான். ஐம்பது அட்வான்ஸ் தந்திட்டான் தோ ..பைல இட்டாந்திருக்கேன்..

சரி கூப்பிடு..

வந்தவனை ஏற இறங்கப் பார்த்து. இரட்டை எழுத்து அம்மா வசைசொல்லால் வரவேற்று தன் சகாக்களை பார்த்து சிரித்தான்.

பதிலுக்கு சிரித்தவர்கள் சிரிப்பில் கோணலாய் போதை.

தா பாருடா கொயந்தய “

முட்ட கையை நீட்டினான். வந்தவன் ஒரு போட்டோவை நீட்டினான். அசிரத்தையாய் வாங்கிப் பார்த்து விட்டு செல்வாவிடம் கொடுத்தான்.

“ தா பாரு. பொம்பள மேட்டரு. நல்லா யோசிச்சுக்கினியா.. அப்பால எதுனா பிரச்னை வந்தா சமாளிச்சிருவியா... “

வந்தவன் கண்களில் பயம் தெரிந்தது. சார்.....என்று தயங்கினான்.

செல்வாதான் சொன்னான் அவ(ன்) நைனா பெரிய

கை கோபி.. இவன் பேரு வந்தாலும் சமாளிச்சுக்குவாரு நாமதான் சேபா .....

இடைமறித்தான் கோபி. “அசால்ட்டுறா... “ என்றவன் இவன் பக்கம் திரும்பி ஒச்சம் பண்ணினா போதுமா.... உசுரு எடுக்க வேணாமா ? “ சிரிப்பு

வந்தவன் பயந்து பதறினான் “ வேணாண்ணே.. திரும்ப நம்ம லைனுக்கு வராம இருந்தா போதும். “

“த்தா அசிங்கபடுத்துறாண்டா நம்மளை. சரி வேற அடையாளம் ? “

அப்பாச்சி ரெட் கலர் நம்பர் சொன்னான். தினம் சாயங்காலம் அஜீஸ்மால் வருவான்.

செல்வா இடைமறித்து நான் பார்த்துட்டேன் கோபி.

இவனிடம் திரும்பி “பாக்கி பணம் காலைல நான் சொன்ன மெக்கானிக் ஷாப்பாண்டை என் அன்னார்ட்டா கொடுத்துரு. நாளை சாயங்காலம் முடிச்சிருவோம். போயிட்டு வா...” என்றான்.

அவன் நகர்ந்ததும் ... “ கோபி மாலன்டை வேணாம். எட்டு மணிக்கு அவன் வீடு திரும்பறப்பா செவுட்டுபேச்சி கோயிலாண்டை செதச்சுருவோம். ஆளே இருக்காது.

சம்பவம் பண்ணிட்டு ஈசியா எஸ் ஆயிறலாம். ஒன்னியும் பிரச்னை இல்லை. சபா அண்ணான் நம்மள பாலோ பண்ணி வருவார். முதல் சம்பவம் கோவி..சரியா பண்ணா சபா ஆள் எடுத்துக்கறேங்குது ...என்ன சொல்ற...?

முட்ட கோபி சுற்றிப் பார்த்தான். சகாக்கள் கிட்டத்தட்ட மயங்கி இருந்தார்கள். யாரும் பேசுகிற நிலையில் இல்லை.

“சரிகாலைலஎன்டஸ்கெட்ச்குடுத்துரு.இந்தபொட்டைகள காலைல சரக்கு எடுத்துக்காம பார்த்துக்கோ. இவனுக போதுமா? கோட்டானையும் இட்டுக்குவமா?“

“வேண்டாம். உளறுவாய் கோவி அவன். “

கூட்டம் கலைத்தார்கள்.

அவர்கள் இருந்த இடம் அமானுஷ்யமாய் குற்றம் ததும்பி இருந்தது.

---

**மறுநாள் மாலை ஆறுமணி. : அஜீஜ்மால்.**

நான்கு பேரும் தனித்தனியாய் அஜீஸ்மால் வாசலை கண்களால் கூர்மையாய் கவனித்திருந்தார்கள். நிமிடங்கள் குரூர தாமதத்தில் நகர்ந்தது. கோபியின் செல் சிணுங்கியது.

செல்வா...” பாரு ரெட் அபாச்சி வருது அவன்தான். “

கோபி போனை விரலால் சீய்த்து ஒரு நம்பர் தொட்டு அழைத்து ..” “மணின்னா... ஆட்டோ எடுத்துனு நான் சொன்ன ஸ்பாட் வந்திரு “ சொல்லி செல்வாவிடம் கண்ணைக் காட்டினான்.

செல்வா தனித்தனியாய் நால்வரையும் கண்களால் தேட... குச்சி ஐஸ் மட்டும் அவன் இடத்தில் இல்லாதை பார்த்து கோபம் கொண்டான். சுற்றித் தேட ம்ஹூம் ஆளைக் காணோம். போனில் குச்சியை அழைத்தான்.

“த்தா..எங்கடா இருக்க ?

“ உன் எதிர்லதான்னா.. சிகரட் வாங்கிட்டு இருக்கேன் பாரு “

மறுபடி ஒரு ஆபாச வார்த்தை.. ஆட்டோ வருது பாரு... சீக்கிரம் வா “

அவர்கள் சம்பவத்துக்கு உத்தேசித்திருந்த அவன் வெளியே வரவும் மணியின் ஆட்டோ மால் எதிரே வரும் அதே நேரத்தில்

குச்சி ஐஸ் சிகரெட்டுக்கு காசு எடுத்துக் கொடுக்கும் அவசரத்தில் இடுப்பில் இருந்த ஒரு அடி நீள கத்தி கீழே விழுந்ததை கவனிக்காமல் ஓடினான்.

கீழே விழுந்த கத்தியை கடைக்காரன் கவனித்தான். சற்று தள்ளி நின்ற எஸ் 3 போலிஸ் நிலையத்தின் கான்ஸ்டபிளும் கவனித்தார்.

---

சிவப்பு அப்பாச்சி மெயின் ரோடு திரும்பி செல்வா சொன்ன செவிட்டு பேச்சி கோவில் வழியில் சீறி வர.... குறுக்கே மணி திறமையாய் ஆட்டோவை குறுக்கே செலுத்த ....அப்பாச்சி வந்த வேகத்தில் ப்ரேக்குக்கு கட்டுப்படாமல் தரையில் இரண்டடி தூரம் ரோட்டை தேய்த்துக் கொண்டு வழுக்கிச் செல்ல...அவன் தப்பிக்க இயலாமல் பைக் கீழே காகிதம் போல் கசங்கி இரத்தத்தால் சிவந்தான்.

ஆட்டோவிலிருந்து முட்ட கோபி செல்வா குச்சி மூவரும் ஆட்டோவை விட்டு வெளியே பாய்ந்து வந்த வேகத்தில் எதிரே வந்த வெளிச்ச பாய்ச்சலில் கண்கள் கூச குறுக்கே வந்த போலிஸ் வாகனத்தில் மோதிச் சிதறினார்கள்.

டிவியில் ப்ரேக்கிங் நியூஸ் அதீத மேக்கப்பில் பொம்மை போல இருந்த நியூஸ் ரீடர் உணர்ச்சியே இல்லாமல் செய்தி வாசித்தாள் .

“ சென்னையின் பிரபலமான பள்ளியில் பத்தாம் வகுப்பு படிக்கும் மாணவனை அரிவாள் மற்றும் பயங்கர ஆயுதங்களுடன் தாக்கி கொலை செய்ய

முயன்ற பதினான்கு வயது சிறுவர்கள் நான்கு பேரை காவல் துறையினர் மடக்கிப் பிடித்தனர். அவர்களிடம் இருந்து அரிவாள்கள் பட்டாக் கத்திகள் மற்றும் நாட்டு வெடிகுண்டுகள் பறிமுதல் செய்யப்பட்டன. விசாரணையில் அவர் உடன் படிக்கும் பெண்ணை காதலிப்பது சம்பந்தமாக இருவருக்கு இடையே தகராறு ஏற்பட்டதாகவும் அதன் காரணமா ஏற்பட்ட மோதலில் இந்த கொலை முயற்சி நடந்திருக்கலாம் என்று முதல் கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. சம்பவத்திற்கு காரணமான இன்னொரு மாணவனை போலீசார் விசாரித்து வருகிறார்கள். பொதுமக்கள் நடமாடும் சாலையில்நடந்தஇந்தசம்பவம்பயத்தில்ஆழ்த்தியுள்ளது. மாணவர்களுக்கு இடையே நடந்த காதல்விவகாரம் கொலை முயற்சி வரை சென்றுள்ளது மாணவர்களின் எதிர்காலம் குறித்து கவலை கொள்ள வைப்பதாக கல்வி ஆர்வலர்கள் கவலை தெரிவித்துள்ளார்கள்.

தமிழகம் கல்வி வளர்ச்சியில் முதலிடத்தில் இருப்பதாகவும் அடுத்த ஆண்டுக்குள் ரோபோக்கள் மூலம் மாணவர்களுக்கு கல்வி பயிற்றுவிக்கப்படும் என்று....”

முற்றும்.... ???